**கவனிக்க.**-இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் 2021 ஆம் ஆண்டுக்கான கொழும்பு மாவட்டத்துக்குரிய நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம் , தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2242 - 2021 අගෝස්තු මස 20 වැනි සිකුරාදා - 2021.08.20

*2242 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 304 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**கவனிக்க.**- (i) குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தம்) சட்டமூலம் 2021, யூலை மாதம் 30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) யூஎன்வீ மன்றம் கூட்டிணைத்தல் சட்டமூலம் 2021, யூலை மாதம் 30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2021, செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, ஓகத்து மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

303 - B 082260 - 353 (2021/08)

# நானாவித அறிவித்தல்கள்

## கொழும்பில் அமைந்துள்ள மேல் மாகாண உயர் நீதிமன்றத்தினால் அதன் குடியியல் சட்ட நியாயாதிக்க அதிகாரத்திற்கமைய பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 12 ஆம் பிரிவுக்கமைய சமர்ப்பிக்கப்பட்ட கம்பனியை முடிவுறுத்தலுக்கான மனு.

வழக்கு இல. : CHC 33/ 2020/ CO
வழக்கின் தன்மை: முடிவுறுத்துதல்

வரையறுக்கப்பட்ட ஏ.டி. எல். டிஜிட்டல் கம்பனி.
2/1, இன்னர் பகதல்ல வீதி,
கொழும்பு -03.

இலக்கம் 2/1, இன்னர் பகதல்ல வீதி, கொழும்பு -03 என்ற முகவரியில் பதிவு செய்யப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட ஏ.டி.எல். டிஜிட்டல் கம்பனியால் அதன் பதிவையும் வியாபார செயற்பாடுகளையும் முடிவுறுத்தல் செய்வதற்காக வேண்டி 2020, ஒற்றோபர் 05 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்ட மனுவிற்கமைய கொழும்பில் அமையப்பெற்றுள்ள மேல் மாகாண உயர் நீதிமன்றத்தினால் ( வர்த்தக உயர் நீதிமன்றம்) விடுக்கப்படும் அறிவித்தல் வருமாறு: குறித்த கம்பனியின் வியாபாரப் பதிவை முடிவுறுத்தல் தொடர்பில் நிறுவனத்துடன் தொடர்புடைய கடன் கொடுநர்கள் மற்றும் பங்குதாரர்கள் எவராயினும் தங்களுக்கு வரவேண்டிய கொடுப்பனவுகள் தொடர்பில் தங்களுடைய எதிர் மனுவை சட்டத்தரணி ஊடாக 2021.09.05 ஆந் திகதிக்கு முன்பாக நீதிமன்றில் முன்வைக்கப்படல் வேண்டுமென இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

கையொப்பம்: திரு. சன்தீப கமாஎத்திகே,
சட்டத்தரணி,
இல. 222/5, கொட்டா றோட், கொழும்பு -08.

**குறிப்பு**: யாராவது இவ்வழக்குத் தொடர்பில் மேற்குறித்த திகதியில் நீதிமன்றில் ஆஜராக விரும்பின், அது தொடர்பிலான எழுத்து மூல அறிவித்தலொன்றை சட்டத்தரணி திரு. சன்தீப கமாஎத்திகே என்பவருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். ஆஜராக விரும்பும் தனி நபராக இருப்பின் பெயர் மற்றும் முகவரி அல்லது நிறுவனமாக இருப்பின் நிறுவனத்தின் பெயர், பதிவு முகவரி போன்ற விபரங்களுடன் தங்களின் சட்டத்தரணி ஊடாக குறித்த விண்ணப்பத்தை 2021.09.01 ஆந் திகதி பி.ப. 6.00 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் மேற்சொல்லப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

8- 269

---

## இலங்கை சித்த உளவியல்சார் உயர் கற்கை நெறி திறந்த நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

புத்திக பதிரண ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "இலங்கை சித்த உளவியல்சார் உயர் கற்கை நெறி திறந்த நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற் குறித்த நிறுவகத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்ட மூலத்தின் நோக்கமாகும்.

(அ) உளவியல் ஆலோசகர்களுக்கான முறையான அமைப்பொன்றினை ஏற்பாடு செய்தல் ;

(ஆ) உளவியல்சார் கற்கைகளை ஊக்குவித்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் உளவியல் ஆலோசகர்களுக்கான தரத்தினை நிறுவுதல் மற்றும் வெளியிடல்;

(இ) நாட்டுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பல்வேறுபட்ட உளவியல் சுகாதார பிரச்சினைகளை தீர்த்து வைத்து அவர்களது உளவியல் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கு அவசியமான உளவியல் ஆலோசகர்களை நாட்டினுள் உருவாக்குதல்;

பிறவும்,

புத்திக பதிரண,
பாராளுமன்ற உறுப்பினர்.

08- 378